# அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி

**(தேசிய தர மதிப்பீட்டுக்குழுவின் மறுமதிப்பீட்டில் ‘A’ தரம் பெற்றது)**

(தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் கல்விநிறுவனம்)

(அரசு உதவி பெறும் கல்லூரி – மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவிப்பு பெற்றது)


பழனி – 624 601.

திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு

**Web : www.apcac.edu.in**

**E-mail : apacac_men@yahoo.co.in**

☎ 04545 – 251288, 251930




## தகவல் தொகுப்பு 2020 – 2021

### அரசு உதவி பெறும் பாடப்பிரிவு

**இளம் கலை (பி. ஏ.,)**

**இளம் அறிவியல் (பி.எஸ்ஸி.,)**

**இளம் வணிகவியல் (பி.காம்.,)**

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A' தரம் பெற்ற அரசு உதவி பெறும் கல்லூரி.

தமிழக அரசு இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் கல்லூரி ஆட்சிக் குழுவின் தலைவராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் செயல் அலுவலர்/தக்கார் அவர்கள் இக்கல்லூரியின் தாளாளராகவும், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் துணை ஆணையர் இக்கல்லூரியின் செயலராகவும் செயல்படுகின்றனர்.

பழனி முருகன் அருளால் இக்கல்லூரியில் கற்பிக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் அனைத்திலும் வெற்றி பெற்று மாணவர் சிறப்படைகின்றனர்.

## *அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகள்*

| | | |
|---|---|---|
| பி.ஏ., மற்றும் பி.எஸ்சி., | பகுதி – I | தமிழ் |
| பி.ஏ., பி.எஸ்சி., மற்றும் பி.காம் | பகுதி – II | ஆங்கிலம் |

**இளம் கலை வகுப்புகள்**

பி.ஏ., தமிழ் இலக்கியம்

பி.ஏ., ஆங்கில இலக்கியம்

பி.ஏ., வரலாறு

பி.ஏ., பொருளியல்

பி.ஏ., இந்தியப்பண்பாடு

**இளம் அறிவியல் வகுப்புகள்**

பி.எஸ்சி., கணிதவியல்
துணைப்பாடம் ( இயற்பியல், கணிதவியல்)

பி.எஸ்சி., இயற்பியல்
துணைப்பாடம் (கணிதவியல், வேதியியல்)

பி.எஸ்சி., வேதியியல்
துணைப்பாடம் (இயற்பியல், கணிதவியல்/விலங்கியல்)

பி.எஸ்சி., தாவரவியல்
துணைப்பாடம் (வேதியியல், விலங்கியல்)

பி.எஸ்சி., விலங்கியல்
துணைப்பாடம் (வேதியியல், தாவரவியல்)

**இளம் வணிகவியல்**

பி.காம்.,

*<u>பகுதி நேர பாட வகுப்புகள் :</u>*

1. C.G.T. காந்திய சிந்தனை (சான்றிதழ் வகுப்பு)
2. D.G.T. காந்திய சிந்தனை (பட்டயச் சான்றிதழ் வகுப்பு)

***விண்ணப்பதாரர்கள் செயல்பட வேண்டிய முறைகள்:***

1. சேர்க்கைக்கான விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்களே பதிவேற்றம் செய்ய வேண்டும்.
2. ஒரு விண்ணப்பத்தின் மூலம் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.
3. கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், +2 மதிப்பெண் பட்டியல், சாதிச்சான்றிதழ் ஆகியவற்றை விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
4. மேல் நிலைப்பள்ளிச் சான்றிதழ்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிறந்த தேதியை குறிப்பிட வேண்டும்.
5. பட்டியல் இனத்தவர்கள் (SC), பட்டியல் இனத்தவர்கள் (அருந்ததியினர்) (SCA)/ பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) / சீர்மரபினர் (DNC) / பிற்பட்ட வகுப்பினர் (BC) மற்றும் பிற்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) சேர்ந்த விண்ணப்பதாரர்களின் சாதிச் சான்றிதழ்கள் உரிய அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
6. சரியான மதிப்பெண்களையே விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களில் குறிக்க வேண்டும். பரிசீலனைக்குப்பின் சரியான மதிப்பெண்கள் குறிக்கப்படவில்லை என்று தெரிய வந்தால்

   அ) விண்ணப்பதாரர் இக்கல்லூரியில் சேரும் தகுதியை இழப்பார்.

   ஆ) அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவர் படிக்க முடியாதபடி தடை செய்யப்படுவார்.

   இ) தவறான மதிப்பெண்களை குறிப்பிட்டதற்காக அவர் மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
7. மாற்றுத்திறனாளிகள், தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவப் படை வீரர்களின் குழந்தைகள், அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தை சார்ந்தவர், விளையாட்டு (மாவட்ட/பிரிவு (மண்டல) அளவிலும் அல்லது அதற்கு மேலும்) சான்றிதழ்கள் மற்றும் தேசிய மாணவர்படை சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் உரிய விபரத்தை அதற்குரிய இடத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
8. சரியான விபரங்கள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
9. கல்லூரிக் கல்வி இயக்குநரக வழிகாட்டுதலின்படி மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.
10. பட்டியலின (SC/ST) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை.
11. விண்ணப்பதாரரின் அதிகபட்ச வயது வரம்பு கல்வியாண்டில் ஜூலை 1ம் தேதியன்று 21 வயதுக்குள் இருக்க வேண்டும். BC, BC-M, MBC/DNC, SC, SCA, ST & Differently abled persons ஆகியோருக்கு அரசு விதிகளின்படி வயது வரம்பில் சலுகை வழங்கப்படும்.

12. கல்லூரிச் சேர்க்கையில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதைக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம்.
13. மாணவ/மாணவியர்களை கேலி (ராக்கிங்) செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் மாணவர்கள் அரசு ஆணைப்படி தண்டிக்கப்படுவார்கள்.
14. மாணவர்கள் சேர்க்கையின் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள்
    i. கடவுச் சீட்டு அளவிலான மூன்று புகைப்படங்கள்.
    ii. பட்டியல் இனத்தவர் (SC), பட்டியல் இனத்தவர் அருந்ததியர் (SCA), பழங்குடியினர் (ST), மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (MBC)/ சீர்மரபினர் (DNC), பிற்படுத்தப்பட்ட இனத்தவர் (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் (BC-M) ஆகியோர் அசல் சாதிச் சான்றிதழ் (சரிபார்க்க மட்டும்). மேற்கண்ட சான்றிதழ்களின் மூன்று ஒளிப்படி நகல்கள் (ஜெராக்ஸ் காப்பி) சமர்ப்பிக்க வேண்டும்.
    iii. கடைசியாக படித்த கல்வி நிறுவனம் வழங்கிய அசல் மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தைச் சான்றிதழை கட்டாயம் ஒப்படைக்க வேண்டும். அசல் மாற்றுச் சான்றிதழ் திருப்பித் தரப்பட மாட்டாது. எனவே, தேவையான ஒளிப்படி (ஜெராக்ஸ்) நகல்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்ப்டுகிறார்கள்.
15. மாணவர்கள் சேர்க்கை பற்றிய விபரங்களை www.apcac.edu.in என்ற கல்லூரி இணையதளத்தில் பார்த்துக் கொள்ளவும்.
16. அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகள் 2019–2020ம் கல்வியாண்டு முதல் சுழற்சி முறையில் (Shift System) வகுப்புகள் நடைபெற்று வருகிறது. அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகள் நடைபெறும் நேரம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை.
17. மாணவர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை கல்லூரி இணையதளம் மூலம் பூர்த்தி செய்து விண்ணப் படிவக் கட்டணமாக ரூ.50/– மட்டும் (ரூபாய் ஐம்பது மட்டும்) (பட்டியலின விண்ணப்பதாரர்கள் தவிர்த்து) கீழ்க்கண்ட விபரப்படி இணையதளம் (Online) மூலம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| Name | : | APAC MEN |
| Bank | : | INDIAN BANK |
| Branch | : | Palani |
| Account Number | : | 457420061 |
| IFSC Code | : | IDIB000P014 |

# கட்டண விபரம் 2020-2021

## இளநிலை ( UG)

**விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் ரூ.50/–**
(பட்டியலின (SC/ST) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை)

**ஆய்வகக் கட்டணம் ( ஒரு வருடத்திற்கு ரூ.)**

| பாட வகுப்பு | இளநிலை | |
|---|---|---|
| | முதன்மைப் பாடம் | துணைப் பாடம் |
| இயற்பியல் | 150.00 | 75.00 |
| வேதியியல் | 200.00 | 75.00 |
| தாவரவியல் | 150.00 | 75.00 |
| விலங்கியல் | 150.00 | 75.00 |

**சிறப்புக் கட்டணம்**

| வ.எண் | விபரம் | | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | உடற்கல்வி | : | 100.00 |
| 2 | பேரவை | : | 6.00 |
| 3 | ஒலி, ஒளி | : | 3.00 |
| 4 | எழுது பொருட்கள் | : | 50.00 |
| 5 | ஆண்டு மலர் | : | 12.00 |
| 6 | நூலகம் | : | 30.00 |
| 7 | நாட்காட்டி | : | 6.00 |
| 8 | வளாக மேம்பாடு | : | 12.00 |
| 9 | மாணவர் நிதி உதவி | : | 3.00 |
| 10 | உலக பல்கலை நிதி உதவி | : | 3.00 |
| 11 | இளைஞர் நலம் | : | 5.00 |
| 12 | ஆண்டு விழா | : | 5.00 |
| 13 | மருத்துவ ஆய்வுக்கட்டணம் | : | 5.00 |
| 14 | விளையாட்டு விழா | : | 75.00 |
| 15 | நாட்டு நலப்பணித்திட்டம் | : | 10.00 |
| 16 | கொடி நாள் | : | 5.00 |
| 17 | செஞ்சிலுவைச் சங்கம் | : | 20.00 |
| | | | **மொத்தம் 350.00** |

| | | |
|---|---|---|
| மாணவர் அடையாள அட்டை | : | 50.00 |
| பல்கலைக்கழக நுழைவுக்கட்டணம் | : | 300.00 |
| பட்டமளிப்பு விழா | : | 25.00 |
| +2 மதிப்பெண் சரிபார்ப்பு கட்டணம் | : | 50.00 |

( மேற்கண்ட கட்டணங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது )